டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 20.01.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 175 - Madurai | Online Edition

# தேசிய வனவிலங்கு வாரியத்தின் நிலைக்குழுக் கூட்டம்

## மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் தலைமையில் நடைபெற்றது

புது தில்லி, ஜன.19

தேசிய வனவிலங்கு வாரியத்தின் 88-வது நிலைக்குழுக் கூட்டம் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் தலைமையில் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் 1972 விதிகளுடன் பாதுகாக்கப்பட்ட பகுதிகள், வனவிலங்கு சரணாலயங்கள், புலி காப்பகங்கள், சுற்றுச்சூழல் மண்டலங்கள் ஆகியவற்றில் பொதுமக்கள் பயன்பாட்டு சேவைகள், ராணுவத்தினரின் சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு தொடர்பான 70 பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டது. உள்ளூர் சமூகத்திற்கு அடிப்படை சேவைகளை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது. ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் குடிநீர் விநியோகம் தொடக்கம் மற்றும் சமுதாய சுகாதார மையங்கள், சாலைகளை அகலப்படுத்துதல், 4ஜி மொபைல் கோபுரங்கள், ஒளிபரப்பு இணைப்புகள் தொடர்பாக இக்குழு பரிசீலித்தது.

பண்டல்கண்டில் குடிநீர் மற்றும் பாசனநீர் விநியோகத்திற்காக மத்தியப்பிரதேசத்தில் நடுத்தர பாசனத்திட்டம் தொடர்பாக பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

எல்லைப்பகுதி மற்றும் உயர்ந்த மலைப்பகுதிகளில் உத்திசார்ந்த உள்கட்டமைப்புத் தொடர்பாக லடாக் யூனியன் பிரதேசம் மற்றும் சிக்கிம் மாநிலத்தில் ராணுவம் தொடர்புடைய 17 பரிந்துரைகளையும் நிலைக்குழு பரிசீலித்தது.

# சந்தைப்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பயிற்சி

பெரம்பலூர், ஜன.19



பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், செட்டிகுளம் கிராமத்தில் விவசாயிகளுக்கான சந்தைப்படுத்துதல் பற்றி விளக்கப்பயிற்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கிராமத்தில் தங்கிப் பயிற்சி பெறும் திட்டத்தின் மூலமாக நாளந்தா வேளாண்மைக் கல்லூரி மாணவியர்களான அ.அபிதாரணி, ரா.அபிநயா, வீ.அன்னலட்சுமி, தோ.அந்தோனி யம்மாள், ம.பாமா, ரா.தீபிகா, மு.தேவிகா மற்றும் செ.திவ்ய தர்ஷினி ஆகியோர் விவசாயிகளுக்கு சந்தைப்படுத்துதல் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தனர்.

சந்தைப்படுத்துதல் (Agricultural Marketing) என்பது விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கும் முறையாகும். இடைத்தரகர்கள் இன்றி விவசாயிகள் நேரடியாக நுகர்வோரிடமோ அல்லது சில்லறை விற்பனையாளர்களிடமோ பொருட்களை விற்பனை செய்வது நேரடி சந்தைப்படுத்துதல் மற்றும் விவசாயிக்கும் நுகர் வோருக்கும் இடையே மொத்த வியாபாரிகள், சில்லறை விற்பனையாளர்கள் அல்லது அரசு முகமைகள் போன்ற இடைத்தரகர்கள் ஈடுபடுவது மறைமுக சந்தைப்படுத்துதல் என்பது பற்றி விளக்கப்பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் மூலம் அதிக அளவிலான விளைபொருட்களை ஒரே நேரத்தில் விற்க முடியும், சேமிப்பு கிடங்கு வசதிகள் கிடைக்கும் என்பது போன்ற நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் சந்தைப் படுத்துதல் குறித்தும் நடைமுறை குறித்தும் தெளிவாக அறிந்து பயனடைந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
## ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் வளர்ப்பு மற்றும் பயன்படுத்தும் முறைகள் பற்றிய பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.19

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பூச்சியியல் துறை மூலமாக 'ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் வளர்ப்பு மற்றும் பயன்படுத்தும் முறைகள்' பற்றிய ஒரு நாள் பயிற்சி 21.01.26 (புதன்கிழமை) அன்று அளிக்கப்படும். பயிற்சியின் முக்கிய அம்சங்களாவன,

- ஒட்டுண்ணி வகைகள்
- ஊண் விழுங்கிகள், இரை விழுங்கிகள்
- நெல் அந்துப்பூச்சி வளர்ப்பு முறை
- டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி வளர்ப்பு
- புழு ஒட்டுண்ணி வளர்ப்பு
- கண்ணாடி இறக்கைப் பூச்சி வளர்த்தல்
- பொறிவண்டு வளர்ப்பு
- பயிர் பாதுகாப்பில் ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் பயன்பாடு

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 21.01.26 (புதன்கிழமை) அன்று காலை 9.00 மணிக்குள்ளாக பூச்சியியல் துறைக்கு தங்கள் செலவில் வந்து சேர வேண்டும்.

பயிற்சியில் கலந்து கொள்வதற்கு ரூ.900/-(ரூபாய் தொள்ளாயிரம் மட்டும்) நேரிடையாக பயிற்சி நாள் அன்று செலுத்த வேண்டும். பயிற்சி நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை. பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 0422 - 6611214, 6611414, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விதைகளை காய வைப்பதின் அவசியம்!

தூத்துக்குடி, ஜன.19

தூத்துக்குடி மாவட்டத்தில் உளுந்து, பாசிப்பயறு. சோளம், கம்பு, போன்ற விதைப் பயிர்களின் அறுவடை முடியும் நிலையில் உள்ளது. அறுவடை செய்த விதைகளை சரியான முறையில் காய வைப்பது அவசியம். அறுவடை சமயம் விதைகளின் ஈரப்பதம் அதிக அளவில் இருக்கும்.

விதையை காய வைப்பது என்பது விதையின் ஈரப்பதத்தை பாதுகாப்பான ஈரப்பதம் வரும் வரை காய வைப்பது ஆகும். ஒவ்வொரு விதைக்கும் அதன் தன்மை, சேமிப்பின் நோக்கம், சேமிக்க பயன்படுத்தப்படும் பைகளைப் பொறுத்து பாதுகாப்பான ஈரப்பதம் என்பது வேறுபடும். விதையை காய வைப்பது விதை உயிருடனும், நல்ல வீரியத்துடனும் சேமிக்க உதவும், இல்லையேல் பூஞ்சானங்களினாலும், வெப்பத்தினாலும், நுண்ணுயிர் தாக்குதலி னாலும் விதைகள் பாதிக்கப்படும். விதையை அறுவடை முடிந்த உடன் காய வைத்து பாதுகாப்பான ஈரப்பதத்தில் சேமிக்க வேண்டும். ஓரிரண்டு மாதம் கழித்து காய வைக்கும் போது அறுவடை சூட்டுடன் மூட்டையிட்டால் விதைகள் கெட்டியாகி அடைகளாகமாறியிருக்கும்.

மேலும் நிறம் மங்கி, முளைப்புத்தினும் குறைந்திருக்கும். விதைகளை காயவைக்கும் போது சில முன்னெச்சரிக்கை நடவடிக் கையை மேற்கொள்வது அவசியம். அவற்றுள் சில பின்வருமாறு. ஈராமான அழுக்கான மண் களத்தில் போடக்கூடாது, களத்தில் ஒரே வயலில் இருந்து பெறபட்ட ஒரே பயிர் ஒரே ரகத்தைத் தான் ஒரு நேரத்தில் கையாள வேண்டும், உச்சி வெயிலில் விதைகளை காய வைக்கக் கூடாது. அந்த நேரத்தில் விதைகளை குவித்து தார்பாய் போட்டு மூடி வைக்க வேண்டும். ஏனெனில் உச்சி வெயிலில் உள்ள புறஊதாக்கதிர்கள் முளைப்புத்திறனை பாதிக்கும். விதைகளை அதிகமாகவும் காய வைக்க கூடாது. ஏனெனில் விதைகள் அதிக மாக காயும் போது விதை மணிகளில் வெடிப்பு ஏற்பட்டு கருச்சிதைவு ஆகி முளைப்புத்திறன் பாதிக்கும். உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறுவகை பயிர்களின் விதைகளை 9 சதவீத ஈரப்பதத்திற்கும் சோளம், கம்பு, போன்ற பயிர்களின் விதைகளை 12 சதவீத ஈரப்பதத் திற்கும் காயவைக்க வேண்டும். எனவே விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் விதைகளை காய வைப்பதில் தனி அக்கறை காட்ட வேண்டும் என திருநெல்வேலி, விதை பரிசோதனை அலுவலர், ஞா.ஆனந்தி ராதிகா மற்றும் தூத்துக்குடி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சேக் நூகு ஆகியோர்கள் கேட்டு க்கொள்கிறார்கள்.





**அன்புடையீர்,**

நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# இணைய வழி பயிர் கணக்கெடுப்பை ஆய்வு செய்த வேளாண்மை துறை அதிகாரிகள்



அரியலூர், ஜன.19

அரியலூர் மாவட்டத்தில் ராபி பருவத்தில் 2025-26 சாகுபடி செய்யப் பட்டுள்ள பயிர் களுக்கு இணைய வழி கணக்கெடுப்பு, (டிசிஎஸ்) வேளாண்மை துறை, தோட்டக் கலைத் துறை மற்றும் வேளாண்மையின் சகோதரத்துறைகள் அலுவலர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. பழைய முறையில் அடங்கல் முறைக்கு மாற்றாக இணைய வழி செயலி மூலம் கணக்கெடுப்பு செய்வதால் மாவட்டத்தில் மொத்த பயிர்களின் சாகுபடி பரப்பு, உற்பத்தி கணக்கீடு செய்ய இயலும், மேலும் பூச்சி நோய் தாக்குதல் விவரம் மற்றும் பயிர் சேதம் கணக்கெடுப்பு செய்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முடியும். இப்பணியினை நேற்று அரியலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி உடன் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆய்வில் கலந்து கொண்டார்.

# வேளாண் துறையின் இயக்குநர்களை சந்தித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், ஜன.19

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் ரகுநாதன், ராஜராஜன், ராஜாராம், ராஜேஸ்வரன், சதீஷ், சஞ்சய், சசிகுமார், சதிஷ் ஆகியோர் தங்கள் இறுதியாண்டு பாடத்திட்டத்திற்காக எலச்சிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் ஜெயமாலா மற்றும் வேளாண் துணை இயக்குநர் .கவிதா ஆகியோரை சந்தித்து நிறுவன அமைப்பு, வேளாண் திட்டங்கள் மற்றும் வேளாண் துணை இயக்குநரின் பொறுப்புகளை பற்றி கேட்டு அறிந்து கொண்டனர்.

மேலும் அவர் கூறியதாவது வேளாண் துணை இயக்குநர் என்பவர் மாவட்ட அளவில் வேளாண் துறையின் திட்டங்களைச் செயல்படுத்துதல், விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிதல், வேளாண் உற்பத்திக்குழு கூட்டங்களை நடத்துதல், மாவட்ட ஆட்சியருக்கு உதவியாளராகச் செயல்படுதல், மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் போன்ற முக்கியப் பணிகளைச் செய்வார், அதாவது விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள், மானியங்கள் மற்றும் உதவி களை வழங்குவதில் முக்கியப் பங்கு வகிப்பார் என்பதை மாணவர்களுக்கு விளக்கினார்.



# மஞ்சள் ஒட்டும் பொறியைப் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்




திருச்சி, ஜன.19

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் ஹரிநந்தனா, பெனாசீர், ரிசா, சாருமதி, செரின் செண்பகம், சிவப்பிரியா, சினேகவள்ளி, சுகந்தி, சுஜா வர்ஷினி, சுவேதா, சுரேகா, வர்சா, வசந்த ஸ்ரீ, யாஷிகா, யோகவர்ஷினி, யுவ ஸ்ரீ.தி, யுவஸ்ரீ.ந ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் கிராமங்களில் தங்கி உழவர் பெருமக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுடைய சாகுபடி அனுபவ முறைகள் பற்றி அறிந்து வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக திருச்சி மாவட்டம் லால்குடியில் உள்ள நகர் கிராமத்தில் வேளாண் மாணவிகள் ஒளிப்பொறி மற்றும் மஞ்சள் ஒட்டும் பொறியைப் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினர். இந்த இரண்டு பொறிகளும் நெல் வயலில் உள்ள பூச்சிகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.இதில் விளக்குப்பொறி மற்றும் மஞ்சள் ஒட்டும் பொறியால் கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள், செயல்படும் விதம், அமைக்கும் முறை மற்றும் பயன்கள் குறித்து மாணவிகள் விவசாயிகளுக்கு விவரித்து கூறினார்.

மேலும் இரசாயனப் பொருட்கள் எதுவும் பயன்படுத்தப் படாததால் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாது என்றும் இந்த பொறிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகள், அந்துப்பூச்சி, அசுவினி பூச்சி போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்துவதாகவும் தெரிவித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வெங்காய சாகுபடிக்கு விதைகள் விற்பனை

# விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரிக்கை

ஈரோடு, ஜன.19

எதிர்வரும் தை பருவத்தில் வெங்காயம் சாகுபடி மேற்கொள்ள ஈரோடு மாவட்டம், காங்கயம் மற்றும் குண்டடம் பகுதி விவசாயிகள் தற்போது தயாராகி வருகிறார்கள். பயிர்களின் விளைச்சல் அதிகரித்து அதிக வருமானம் தருவதில் நல்ல விதைகளின் பங்கு முக்கியமானது. தரமான விதைகளை உரிய பருவத்தில் விவசாயிகளுக்கு கிடைத்திடும் வகையில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் விதை ஆய்வு பிரிவு அனைத்து விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

விவசாயிகள் விதை விற்பனை நிலையங்களில் விதைகளை வாங்கும் போது விதைகள் தரமானதா? என்பதைக் கண்டறிந்து வாங்க வேண்டும்.

விதை விற்பனை நிலைய உரிமம் பெறாத விதை விற்பனை நிலையங்களில் விதைகளை வாங்கக்கூடாது. காலாவதியான விதைகளை எக்காரணம் கொண்டும் வாங்கக்கூடாது. விதைகளை வாங்கும் போது விதை விற்பனை ரசீது கட்டாயம் கேட்டு பெறவேண்டும். ரசீதில் விதைகளின் ரகம், நிலை, குவியல் எண், காலாவதி நாள் முதலியன குறிப்பிட்டு விவசாயி கையொப்பம் பெற்று விற்பனைபட்டியல் பெற வேண்டும். எக்காரணம் கொண்டும் விதைகளை அதிகபட்ச சில்லறை விலைக்கு மிகாமல் விற்பனை செய்வது அவசியமாகும்.

திருப்பூர் மாவட்டத்தில் காய்கறி நாற்றுக்கள் மற்றும் பழ மர நாற்றுக்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக காய்கறிகளான வெங்காயம், தக்காளி மற்றும் கத்தரி போன்றவை விற்பனை செய்யப்படுகிறது. நாற்றுக்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நாற்றுப் ணபண்ணை உரிமையாளர்கள் அனைவரும் விதை விற்பனை உரிமம் பெற்றுத்தான் விற்பனை செய்ய வேண்டும். விவசாயி களின் தேவையைப் பயன்படுத்தி, தரமற்ற நாற்றுக்களை விற்பனை செய்பவர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்ய தேவையான விதை கொள்முதல் பட்டியல், குவியல் எண், காலாவதி நாள் மற்றும் நாற்றாங்கால் விதைப்பு நாள் ஆகிய விபரங்களை நாற்றுகள் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்க வேண்டும். தரமற்ற மற்றும் பதிவுச் சான்று இல்லாத ரகங்களின் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டால் விதைச்சட்டம் 1966-ன் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈரோடு, விதை ஆய்வு துணை இயக்குநர் பெ.சுமதி தெரிவித்துள்ளார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# புத்தொழில் நிறுவனங்களின் அசுர வளர்ச்சியில் பெண்களின் பங்கு

பொதுவாக ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருப்பது விவசாயமும் தொழில்துறையும் தான். இவை இரண்டும் நாம் நாட்டை (இந்தியாவை) பொறுத்தவரை இரண்டு கண்களாகும். தொழில்துறை நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசால் முன்னெடுக்கப்பட்ட 'ஸ்டார்ட் ஆப் இந்தியா' தொழில் வளர்ச்சிக்கு அடித்தளத்தை அமைத்து கொடுத்துள்ளது.

இந்தியாவிலே புதுமையான கண்டுபிடிப்பு மற்றும் தொழில் முனைவோர்களுக்கு ஒரு உறுதியான அனைத்து வசதியையும் ஏற்படுத்துவதன் மூலமாக இன்றைய நவீன பொருளாதார உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் துறையாக இது மாறி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்தியாவில் ஸ்டார் ஆப் நிறுவனங்களின் எண்ணிக்கை தெரியுமா?**

2016யில் வெறும் 500-ஆக இருந்த புத்தொழில் நிறுவனங்கள் தற்போது இரண்டு லட்சத்து 9 ஆயிரத்து 561 ஆக உயர்ந்துள்ளது. கடந்த ஒரு ஆண்டில் மட்டும் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 50,404 ஆக உயர்ந்து இருப்பது மகிழ்ச்சியான தகவல் தானே.

**புத்தொழில் நிறுவனங்களால் என்னென்ன நன்மைகள்?**

1) புத்தொழில் நிறுவனங்கள் மூலமாக 2 லட்சத்துக்கு அதிகமான நேரடி வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன.

2) 2014யில் 4 யூனிகார்ன் நிறுவனங்கள் இருந்த நிலையில் தற்போது 125 யூனிகார்ன் நிறுவனங்களாக மாறி உள்ளது.

3) உலகின் 3வது பெரிய ஸ்டார்ட் ஆப் சுற்றுசூழல் அமைப் பாக இந்தியா உருவெடுத்துள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

### தமிழ்நாட்டில் புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி?

கடைசி இடத்தில் இருந்த தமிழ்நாடு இன்று அரசு மேற்கொண்ட நடவடிக்கையால், 2021ல் 2000 இருந்த புத்தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கை தற்போது 12 ஆயிரத்து கடந்து உயர்ந்துள்ளன.

### புத்தொழிலில் பெண்களின் பங்கு?

புத்தொழில் நிறுவனங்களில் பெண்கள் பங்கு அளப்பரியதாக உள்ளது. புத்தொழில் நிறுவனங்களின் இயக்குநர்கள், கூட்டாளராக 45% பெண்கள் இருக்கின்றனர். ஆண்களுக்கு நிகராக பெண்களின் பங்கு புத்தொழிலில் அதிகமாக உள்ளது. பெண்கள் தலைமையில் புதிய புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி, வேலை வாய்ப்பை உருவாக்கி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக உதவுகிறார்கள். இது இந்திய பொருளாதாரத்திற்கு வலு சேர்க்க உதவுகின்றன. புத்தொழில் நிறுவனங்களில் பெண்களின் பங்கு மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## கால்நடை மருத்துவ முகாமில் பங்கேற்ற வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, ஜன.19

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் (07/01/26) அன்று கால்நடை மருத்துவ முகாமில் (NADCP FMD CP 8 ஆம் முறை தடுப்பூசி முகாம்) பங்கேற்று உதவி செய்தனர். அந்த முகாமில் கோமாரி நோய் (Foot and mouth disease) எனப்படும் கால்நடை நோய்க்கு தடுப்பூசி போடப்பட்டது. இதில் மாணவர்கள் அங்குள்ள கால்நடை வளர்ப்பவர்களுக்கு இந்த கால்நடை தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வை எடுத்துரைத்தனர்.

# உயிர் உரங்களுடன் விதை நேர்த்தி : விவசாயிகளுக்கு செய்முறை விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாகப்பட்டினம், ஜன.19

மன்னார்குடி, மேலமறவக்காடு பகுதியில் விவசாய உற்பத்தியை நிலைத்த முறையில் உயர்த்தும் நோக்கில், நாகப்பட்டினத்தை சார்ந்த வேளாண் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு உயிர் உரங்களுடன் விதை நேர்த்தி குறித்த செய்முறை விளக்க நிகழ்ச்சி நடத்தினர். இந்த நிகழ்ச்சியில் விதைப்பதற்கு முன் விதைகளுக்கு அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாசியம் கரைக்கும் பாக்டீரியா போன்ற உயிர் உரங்களை பயன்படுத்தும் முறைகள் நேரடியாகக் காண்பிக்கப் பட்டன.



உயிர் உரங்களின் பயன்பாட்டால் முளைப்புத் திறன் அதிகரிப்பு, வேர் வளர்ச்சி மேம்பாடு, மண் வளம் பாதுகாப்பு மற்றும் இரசாயன உரச் செலவு குறைப்பு ஆகிய நன்மைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், விதைகளுடன் உயிர் உரங்களை கலக்கும் சரியான அளவு, உலர்த்தும் நேரம் மற்றும் விதைப்பு கால இடைவெளி குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் ஆனந்தி, கீர்த்திகா, மோனிகா, பிரியதர்ஷினி, சுபலட்சுமி சுவாதி, தமிழ்கலைச்செல்வி போன்ற மாணவர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு செய்முறைப் பயிற்சி மூலம் விதை நேர்த்தி முறைகளை கற்றுக் கொடுத்தனர். மேலும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறும் வழிகளை அறிந்தனர். இந்த நிகழ்ச்சி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விவசாய நிலங்களில் கள்ளிச்செடி பறவை அமர்வுகள் பூச்சி மேலாண்மைக்கான ஒரு இயற்கை உத்தி!



விவசாயத்தில் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை முறையில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 'பறவை அமர்வுகள்' (Bird Perches) ஒரு சிறந்த கருவியாகும். குறிப்பாக, காய்ந்த கள்ளிச்செடி கிளைகளைப் பயன்படுத்தி அமைக்கப்படும் இந்த அமர்வுகள், விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிக லாபத்தைத் தருகின்றன.

**பயிர் நிலத்தில் பறவை அமர்வுகளின் முக்கியத்துவம்**

நிலத்தில் ஆங்காங்கே பறவைகள் வந்து அமர வசதியாக கள்ளிச்செடி குச்சிகளை நட்டு வைப்பதன் மூலம், இரை தேடும் பறவைகள் (Predatory Birds) கவரப்படுகின்றன.

**பூச்சிகளை உண்ணுதல் :** அமர்வுகளில் அமரும் பறவைகள், பயிர்களைத் தாக்கும் பச்சைப்புழுக்கள், லார்வாக்கள், அசுவினிப் பூச்சிகள் மற்றும் வெட்டுக்கிளிகளை எளிதாகக் கண்டறிந்து உண்டு விடுகின்றன.

**இரவு நேரக் கண்காணிப்பு :** ஆந்தைகள் போன்ற பறவைகள் இந்த அமர்வுகளில் அமர்ந்து இரவு நேரங்களில் பயிர்களைச் சேதப்படுத்தும் எலிகளைக் வேட்டையாடுகின்றன.

**ஏன் கள்ளிச்செடியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?**

**நீடித்த உழைப்பு :** கள்ளிச்செடியின் தண்டுப்பகுதி காய்ந்த பிறகு மிகவும் உறுதியானது. இது மழை மற்றும் வெயிலைத் தாங்கி நீண்ட காலம் நிலத்தில் நிலைத்து நிற்கும்.

**சிறந்த பிடிமானம் :** கள்ளிச்செடியின் துளைகளும், கரடு முரடான மேற்பரப்பும் பறவைகள் நீண்ட நேரம் சோர்வின்றி அமர வசதியாக இருக்கும்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு :** இது முற்றிலும் இயற்கை சார்ந்தது என்பதால் நிலத்திற்கோ, பயிர்களுக்கோ எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

**அமைக்கும் முறை (Field Installation) எண்ணிக்கை :** ஒரு ஏக்கர் நிலத்திற்கு சுமார் 15 முதல் 20 பறவை அமர்வுகள் தேவைப்படும்.

**வடிவம் :** கள்ளிச்செடி கிளைகளை ஆங்கில எழுத்து 'வீ' வடிவில் கட்டி, பயிரின் உயரத்தை விட 1 முதல் 2 அடி உயரமாக இருக்குமாறு நிலத்தில் நட வேண்டும்.

**இடம் :** நிலத்தின் ஓரங்களிலும், ஊடுபயிர்களுக்கு இடை யிலும் சமமான இடைவெளியில் இவற்றை அமைக்கலாம்.

**கூடுதல் பலன்கள் : ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM)**

கள்ளிச்செடி அமர்வுகளுடன் சேர்த்து பின்வரும் இயற்கை முறைகளையும் பின்பற்றலாம்:

**மஞ்சள் நிற ஒட்டும் பொறிகள் :** சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த.

**ஆமணக்குச் செடி (Trap Crop) :** பூச்சிகளைத் திசைதிருப்ப வயல் ஓரங்களில் ஆமணக்கு நடலாம்.

**வேப்ப எண்ணெய் கரைசல் :** அவ்வப்போது தெளிப்பதன் மூலம் பூச்சிகளின் பெருக்கத்தைத் தடுக்கலாம்.

**முடிவுரை :** ரசாயனப் பூச்சிக்கொல்லிகளுக்காகப் பல்லாயிரம் ரூபாய் செலவு செய்வதைத் தவிர்த்து, கள்ளிச்செடி போன்ற இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்திப் பறவைகளை நம் நிலத்திற்கு அழைப்போம். இது மண்ணின் வளத்தைக் காப்பதோடு, நஞ்சில்லாத விவசாயத்திற்கும் வழிவகுக்கும்.

இக்கட்டுரையை வழங்கியவர் **அ.அபிவர்மன்,** இறுதி ஆண்டு வேளாண் மாணவர், என்எம்பி பல்கலைக்கழகம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# தேமோர் கரைசல் குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் செயல் விளக்கம்





கிருஷ்ணகிரி, ஜன.19

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அதியமான் வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின் சார்பாக வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர் செல்வம், தலைமையில் 12 பேர் (சிந்துஜா ஸ்ரீ, சௌந்தரி ச, ஸ்ரீ நதி ஏ, சுப ஸ்ரீ மு சி, சுவேதா ந, சுவாதி பிரியா மு, சுவேதா கோ தா, தமிழரசி த, திரிசா கு, ஸ்டெப்ரினா சு, வைஷ்ணவி கி, வான்மதி த, கொண்ட இளம் அறிவியல் 4ம் ஆண்டு மாணவிகள் குழு ஊரக வேளாண்மை மற்றும் பயிற்சி திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளனர். சூளகிரி வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அங்கு உள்ள விவசாயி களிடம் உரையாடவும், அவர்கள் பின்பற்றும் பாரம்பரிய மற்றும் தொழில்நுட்ப விவசாய செயல்முறை மற்றும் பயிர் திட்டங்களை மாணவிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும், மாணவிகள் கல்லூரியில் கற்றறிந்த நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன விவசாய இயந்திரங்களைப் பற்றி எடுத்துரைத்து செயல்முறை விளக்கங்களையும் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்க உள்ளனர். அதன் ஒரு பகுதியாக, சூளகிரி வட்டத்தில் உள்ள சாமனப்பள்ளி கிராமத்தில், தேமோர் கரைசல் செயல் முறை மற்றும் பயன்கள் பற்றி விவரித்தனர். தேமோர் கரைசல் (Themor Karaisal) என்பது இயற்கை விவசாயத்தில், குறிப்பாக பூ உதிர்வதைத் தடுக்கவும், மகசூலை அதிகரிக்கவும் பயன் படுத்தப்படும் ஒரு இயற்கைப் பானமாகும். இது புளித்த மோர் மற்றும் தேங்காய் பால் கலந்து தயாரிக்கப்பட்டு, செடிகளுக்கு

இலைவழி ஊட்டச்சத்தை வழங்குவதோடு, பூக்கள் கொட்டாமல் பெரிய காய்களாகவும், சுவையாகவும் மாற உதவுகிறது. இதைத் தயாரிக்க, புளித்த மோர் மற்றும் தேங்காய்ப் பால் தேவைப்படும்.

தேமோர் கரைசல் ஒரு லிட்டர் எடுத்துக் கொண்டோமானால் 9 லிட்டர் தண்ணீர் கலந்து செடி கொடிகளின் இலைகள் மேல் நன்றாக நனையும்படி தெளித்து விடலாம். பூக்கும் தருணத்தில் வாரம் ஒரு முறை தேமோர் கரைசல் கொடுப்பதினால் அதிக பூக்கள் பூக்கும். பூக்கள் கொட்டாமல் காய்கறிகள் பெரியதாக மிகவும் சுவையானதாக காய்க்க ஆரம்பிக்கும் என்று மாணவிகள் செயல் விளக்கம் மூலம் எடுத்துரைத்தனர்.




# பங்கேற்பு கிராம மதிப்பீடு மூலம் கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

திருவள்ளூர், ஜன.19



திருவள்ளூர் மாவட்டம், பல்லரம்பாக்கம் ஊராட்சியில் தொன்போஸ்கோ வேளாண் கல்லூரி மாணவிகள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் புல்லரம்பாக்கம் ஊராட்சியில் பங்கேற்பு கிராம மதிப்பீடு (PRA) மூலம் கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த நிகழ்ச்சியின் மூலம், இயக்க வரைபடம் (Mobility map), செல்வ நிலை வகைப்பாடு (Wealth Ranking), தினசரி செயல் (Daily Activity Clock), பிரச்சினை மரம் (Problem Tree), L (Venn Diagram), முழு கிராமத்தின் வள மற்றும் சமூக வரைபடம் (Resource & Social Map), காலவரிசை நிகழ்வுகள் (Timeline) மற்றும் வட்ட வென் வரைபடங்கள் (Pie Charts) ஆகியவை கிராம மக்கள் முன் விளக்கப்பட்டன. இதன் மூலம் புல்லரம்பாக்கம் கிராம மக்கள் தங்களின் தேவைகள். பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் பயன்படுத்த வேண்டிய பல்வேறு தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு பெற்றனர்.

# பங்கேற்பு கிராம மதிப்பீடு நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

மதுரை, ஜன.19

வெ.செல்வராஜ், வேளாண்மை உதவி இயக்குநரின் தலைமையின் கீழ் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, ஸ்ரீரெங்கபுரத்தில் அமைந்துள்ள கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதியாண்டு பயின்று வரும் மாணவிகளான முனிசா, தருணிகா, ஜீவிதா, கோபிகா, அன்சல்னா, நெஷ்மிக்கா மற்றும் அஜிதா ஆகியோர் கொடிக்குளம் கிராம மக்களுடன் இணைந்து PRA (Participatory Rural Appraisal) ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு தொடர்பான கிராம வளர்ச்சி மதிப்பீட்டு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினார்கள்.





இந்த PRA செயல்பாடு மூலம் கிராமப்புற மக்களின் தேவைகள், வளங்கள் மற்றும் அவர்கள் எதிர் கொள் ளும் பிரச்சனைகள் குறித்து நேரடியாக ம க் க ளு ட ன் கலந்துரையாடி அறிந்து கொண்டார்கள். PRA என்பது வளர்ச்சித் திட்டங்களை கிராம மக்களுடன் இணைந்து உருவாக்கப் பயன்படும் ஒரு முக்கியமான முறை என்பதையும் மாணவிகள் விளக்கினார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது கிராமத்தின் அடிப்படை வசதிகள், விவசாயத்தில் உள்ள சவால்கள், குடிநீர் வசதி, சுகாதாரம், கல்வி நிலை, வேலைவாய்ப்பு தொடர்பான பிரச்சனைகள் குறித்து கிராம மக்களிடம் இருந்து கருத்துகள் சேகரிக்கப்பட்டன. சமூக வரைபடம், வென் வரைபடம், கால வரிசை மற்றும் பிரச்சனை மரம் போன்ற PRA முறைகள் மூலம் தகவல்கள் பதிவு செய்யப்பட்டன.இந்த நிகழ்ச்சியில் பெண்கள், இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் பெருமளவில் கலந்து கொண்டு தங்களது தேவைகள் மற்றும் குறைகளை வெளிப்படுத்தினர். சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் கிராம வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்க முடியும் என மாணவிகள் தெரிவித்தார்கள்.

மாணவிகளின் சமூக சேவை உணர்வை கிராம மக்கள் பாராட்டியதுடன், இதுபோன்ற PRA விழிப்புணர்வு மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# நாற்று நடவு பணியில் ஈடுபட்ட வேளாண்மை கல்லூரி மாணவிகள்

பெரம்பலூர், ஜன.19

பெரம்பலூர் மாவட்டம், நாளந்தா வேளாண்மை கல்லூரி மாணவிகள், தங்களது கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் ஒரு பகுதியாக, விவசாயிகளுடன் இணைந்து நெல் நாற்று நடவு (Transplanting) பணிகளில் நேரடியாக ஈடுபட்டனர்.



இந்த பயிற்சியின் போது, நெல் பயிரின் முக்கியமான கட்டமான நாற்று நடவு முறைகள் குறித்து மாணவிகளுக்கு செய்முறை விளக்கங்கள் வழங்கப்பட்டன. குறிப்பாக, சரியான நாற்று வயது தேர்வு, வரிசை இடைவெளி, ஒரே குழியில் நட்டிட வேண்டிய நாற்றுகளின் எண்ணிக்கை, நீர் மேலாண்மை போன்ற தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து விவசாயிகள் விளக்கினர்.

மேலும், பாரம்பரிய முறையிலும் நவீன தொழில்நுட்பங்களுடனும் நாற்று நடவு செய்வதால் கிடைக்கும் பயன்கள் குறித்து மாணவிகள் அறிந்து கொண்டனர். இத்தகைய புலப் பயிற்சிகள் மாணவிகளுக்கு நடைமுறை அறிவை வளர்க்கவும், விவசாயிகளின் உழைப்பை புரிந்துகொள்ளவும் பெரிதும் உதவுகின்றன எனக் கூறப்பட்டது

இந்த நிகழ்வில் நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகளான வ.கிருபாலினி, தி.ஜீவிதா, ரா.கவியா, ம.காவ்யா, செ. காயத்திரி, பா.கீர்த்திகா, மு.கிருத்திகா மற்றும் தி.மீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# வசந்தம் அக்ரிடெக்

VASANTHAM Agri Tech

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்



Sarathi i06

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும்

சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகளுக்கு HEALDS தன்னார்வ அமைப்பில் நீர்ப்பிடிப்பு மேலாண்மை பயிற்சி



நாமக்கல், ஜன.19

பி.ஜி.பி. வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் 10.01.26 அன்று மேலப் பேட்டை பாளையத்தில் அமைந்துள்ள Health And Education Alternative Development Studies (HEALDS) தன்னார்வ அமைப்பை நேரில் சென்று பார்வையிட்டனர். HEALDS அமைப்பின் நிறுவனர் மற்றும் இயக்குநர் M.S.A.சதீஷ் பாபு மற்றும் திட்ட மேலாளர் பிரபாகரன் ஆகியோர் மாணவிகளுக்கு நீர்ப்பிடிப்பு மேம்பாட்டு திட்டங்கள் (Watershed Development Programmes) குறித்து விரிவாக விளக்கினர்.

நீர்ப்பிடிப்பு மேம்பாட்டு திட்டங்கள் என்பது மண், நீர் மற்றும் தாவர வளங்களை பாதுகாப்பதுடன், மழை சார்ந்த பாழடைந்த நிலப் பகுதிகளில் வாழ்வாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட ஒருங்கிணைந்த, சமூக மையமான திட்டங்களாகும். ஒரு முழுப் பகுதியை (watershed) ஒரே அலகாகக் கொண்டு அறிவியல் முறைகளும் மக்களின் பங்கேற்பும் மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டங்களின் முக்கிய இலக்குகள் மண் அரிப்பை குறைத்தல், நீர் கிடைப்பை அதிகரித்தல், வேளாண் உற்பத்தித்திறனை உயர்த்தல், சூழலியல் சமநிலையை மீட்டெடுத்தல் மற்றும் நிலையான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவை யாகும். இத்தகைய திட்டங்கள் பிரதான் மந்திரி க்ரிஷி சிஞ்சாயீ யோஜனா (PMKSY) Pradhan Mantri Krishi Sinchayee Yojana இன் நீர்ப்பிடிப்பு மேம்பாட்டு கூறின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன என்பதையும் அவர்கள் எடுத்துரைத்தனர். இந்த கலந்துரையாடல் மாணவிகளுக்கு கல்வியியல் அறிவையும் நடைமுறை அனுபவத்தையும் அளித்ததுடன், நீர்ப்பிடிப்பு மேலாண்மை தொடர்பான புரிதலை மேலும் ஆழப்படுத்தும் வகையில் பயனுள்ளதாக அமைந்தது.

# உழவர் திருநாள் விழிப்புணர்வு பேரணி நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



தேனி, ஜன.19

உழவர் திருநாளை முன்னிட்டு, 17.01.26 அன்று தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டாரம், பாலார்பட்டி கிராமத்தில் விவசாயி களுக்கான விழிப்புணர்வு பேரணி சிறப்பாக நடத்தப்பட்டது. இப் பேரணி, விவசாயத்தின் முக்கியத் துவம், இயற்கை வளங்களின் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்தின் தாக்கம் மற்றும் எதிர்கால விவசாய வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு குறித்து பொது மக்களுக்கும் விவசாயிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வு பேரணி, மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், அந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் ஏஞ்சல், ஏஞ்சல் பிஜு, ஈஷிதா, கிரிஜா, கோகுல் மித்ரா, குருசங்கீதா, இம்ரானா, இந்துமதி மற்றும் இசை பாரதி ஆகியோர் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்தனர். மாணவிகள் விவசாயிகளுடன் நேரடியாக கலந்துரையாடி, விவசாய விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இப்பேரணியில் சுமார் 25 விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். அவர்கள் கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாக பேரணியாகச் சென்று, விவசாயம் நாட்டின் உணவு பாதுகாப்பிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் அடித்தளமாக இருப்பதை பொது மக்களிடையே எடுத்துரைத்தனர்.


விவசாயிகள் தங்களின் அனுபவங்களையும், தற்போதைய சவால்களையும் பகிர்ந்து கொண்டது நிகழ்ச்சிக்கு சிறப்பு சேர்த்தது. பேரணிக்காக மாணவிகள் பல்வேறு விழிப்புணர்வு விளக்கப் படங்களை தயார் செய்திருந்தனர். நீர் பாதுகாப்பு தொடர்பாக மழைநீர் சேகரிப்பு, நீர் சிக்கன பாசன முறைகள், நிலத்தடி நீர் பாதுகாப்பு போன்ற தகவல்கள் தெளிவாக விளக்கப்பட்டன. நீர்வள பாதுகாப்பு இன்றைய விவசாயத்தின் அடிப்படை தேவையாக இருப்பதை உணர்த்தும் வாசகங்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன.

மேலும், விவசாயத்தில் இளைஞர்களின் பங்கு மற்றும் முக்கியத்துவம் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. இளைஞர்கள் விவசாயத்திற்கு வந்தால் புதிய தொழில்நுட்பங்களும் நவீன சிந்தனைகளும் விவசாயத்தில் புகும் என்பதைக் கூறும் வாசகங்கள் இடம்பெற்றன. விவசாயம் இளம் தலைமுறைக்கும் ஒரு மரியாதைக் குரிய மற்றும் நிலைத்த தொழிலாக மாற வேண்டும் என்பதே இப்பேரணியின் முக்கிய நோக்கமாக அமைந்தது.

அதேபோல், விவசாயிகளுக்காக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு விவசாயத் திட்டங்கள், மானிய உதவிகள், பயிர் காப்பீட்டு திட்டங்கள் மற்றும் இயற்கை வேளாண்மை ஊக்குவிப்பு திட்டங்கள் குறித்த தகவல்களும் விளக்கப்படங்களின் மூலம் எடுத்துரைக்கப் பட்டன. இதன் மூலம் அரசு திட்டங்களை முழுமையாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு விவசாயிகள் மத்தியில் உருவாக்கப்பட்டது. காலநிலை மாற்றம் விவசாயத்தில் ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்தும் இப்பேரணியில் எடுத்துரைக்கப் பட்டது. மாறுபடும் மழை, அதிகரிக்கும் வெப்பநிலை, புதிய பூச்சி மற்றும் நோய்களின் தாக்கம் போன்றவை விவசாய உற்பத்தியை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைக் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. நிலைத்த மற்றும் சூழலுக்கு உகந்த வேளாண்மை நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய அவசியம் வலியுறுத்தப் பட்டது.

மொத்தத்தில், உழவர் திருநாளை முன்னிட்டு RAWE திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு பேரணி, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை அதிகரித்தது. மதுரை வேளாண்மை கல்லூரி மாணவிகள், விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் இணைந்து செயல்பட்ட இந்த நிகழ்ச்சி, கிராமப்புற வளர்ச்சிக்கும் விவசாய முன்னேற்றத்திற்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாக அமைந்தது.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**